## 2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (உ) தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் காலையிலிருந்து ஏதோ சொல்ல வருகிறீர்கள். (குறுக்கீடு) நான் நிகழ்ச்சி நிரலிற்குள் போய்விட்டேன். இப்போது நீங்கள் கேட்டால் எப்படி?*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு பிரச்சினை. ஒரே வார்த்தையில் முடித்துவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன முக்கியமான பிரச்சினை, தெரியவில்லை. சரி சொல்லுங்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் மூலமாக மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டு, திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறோம். தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து, விவசாய நிலங்களுக்கும், மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கும் விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களால் 4(*a*)* amendment *என்ற சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில்* rules*–சட்ட விதிகள் இன்னும்* formulate *செய்து அனுப்பப்படாத காரணத்தினால், சொந்த நிலங்களில் இருக்கக்கூடிய மரங்களைக்கூட முறிக்க முடியாமல், 300–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். நீங்கள், அறிவிப்புக் கொடுக்காமல், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் எதிர்பார்த்தால் இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் வைத்திருக்க மாட்டார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் பதிவு செய்ய வேண்டுமென்று நினைத்தீர்கள். பதிவு செய்யப்பட்டது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தில் இருக்கிறது. உட்காருங்கள்.*